Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத வூ ஆவணி மீ 10 உ. திங்கட்கிழமை (27-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 06 கதிர்: 177

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களினால்

# ஊர்காவற்றுறைப் பகுதியில்

# அப்பாவி மக்கள் 75 பேர் பலி!

## பல நூற்றுக்கணக்கில் ஆண்கள் பணயக் கைதிகளாக தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 27

ஸ்ரீலங்கா இராணுவத்தினர், கடந்த புதன்கிழமை முதல் சனிக்கிழமை மாலைவரை ஊர்காவற்றுறை கரையிலிருந்து அல்லைப்பிட்டி பகுதிவரை மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளினால் எழுபத்தைந்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பலியானார்கள்.

சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் என பல நூற்றுக் கணக்கில் ஆண்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

படையினர் ஊர்காவற்றுறையிலிருந்து அல்லைப்பிட்டி பகுதிக்கு முன்னேறுவதற்கு மனித கேடயமாகப் பாவிப்பதற்கும்—

தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமாகவே ஆண்களை நூற்றுக் கணக்கில் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பொது இடங்களில் தஞ்சம் புகாமல் வீடுகளில் இருந்தோரும், பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்தோரும் படையினரால் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டதாக அங்கிருந்து தப்பி வந்த சிலர் தகவல் தெரிவித்தனர்.

அறிவித்தல் பிரகாரம் ஆலயங்களுக்குப் போகாமல் இருந்தது ஏன் என்று கேட்டுப் பலர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் 20 பேர் வரையும்—

வேலணை மற்றும் நாரந்தனையில் சுமார் 40 பேரும்—

அல்லைப்பிட்டிப் பகுதியில் 15 பேர் வரையும் கொலையுண்டதாக முதலில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவுக்கு முன்னேற 3 மணி நேர கடும் சண்டை

கொழும்பு, ஆக. 27

மண்டைதீவைக் கைப்பற்றுவதற்காக மூன்று மணித்தியாலங்கள் பெரும் சண்டை நடைபெற்றதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். கோட்டையில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் படையினர் இப்போது தாக்குதலை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை —

முற்றுகைக்குள்ளான யாழ். கோட்டை இராணுவ முகாமை விடுவிக்கும் கட்டத்தை அரசுப் படைகள் நெருங்கிவிட்டதாக இலங்கை இராணுவம் தெரிவித்தது என்று பி. பி. சி. நேற்று மாலை அறிவித்தது. (உ-எ)

## தாக்குப்பிடிக்க முடியாமல் பரந்தனில் படை வாபஸ்!

### இராணுவம் ஒப்புக்கொள்கிறது

கொழும்பு, ஆக. 27

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் தான் பரந்தன் இராணுவ முகாமைக் கைவிட்டு, இராணுவத்தினர் ஆனையிறவு முகாமுக்கு பின் வாங்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு இலங்கை இராணுவம் ஒப்புக் கொண்டதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. (உ-எ)

## இன்று அல்லது நாளை விடயம் தெரிய வரும்!

### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 27

யாழ்ப்பாணத்தில் நடக்கப் போவது இன்று அல்லது நாளை தெரிய வரும்.

— இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சொன்னதாக திவயின சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டது.

''விடுதலைப் புலிகளின் யுத்த இரகசியங்கள் எமக்குக் கிடைத்து விட்டன'' — என்றும் அமைச்சர் சொன்னதாக அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## காலையில் நடந்த குண்டு வீச்சுகள்

யாழ்ப்பாணம், ஆக. 27

திருநெல்வேலி, சுன்னாகம் சந்தைப் பகுதிகளில் நேற்றுக் காலை பொம்மரிலிருந்து குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

திருநெல்வேலி தாக்குதலில் சந்தைக்கு முன்பாக உள்ள பழைய கட்டடம் ஒன்று பலத்த சேதமுற்றது. சுன்னாகத்தில் தேனீர்க் கடையின் ஒருபகுதி சேதமுற்றது. [ஓ-ரி]

## நாரந்தனையில் இறந்தோர்

யாழ்ப்பாணம், ஆக. 27

நாரந்தனையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட சிலரின் பெயர்கள் வருமாறு:-

வசந்தகுமார் (23 வயது), சூசைப்பிள்ளை (45 வயது), அமிர்தலிங்கம் (24 வயது), பாலன் (35 வயது), சிவகுமார் (16 வயது), அன்ரன் (27 வயது,) கிருஷ்ணபிள்ளை (80 வயது), மனுவல் (55 வயது), ஆறுமுகம் (40 வயது) (ஓ-3)

## கைது

யாழ்ப்பாணம். ஆக. 27

கடந்த 24 ஆம் திகதி மட்டகளப்பு ஆயித்தியமலை நெல்லுக்கருப் பகுதியில் ஏ.கே 47 துப்பாக்கியுடன் ஈ. பி. ஆர் எல். எப் உறுப்பினர் ஒருவர் தங்களால் கைது செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [உ-5]

## மண்டைதீவு மோதலில் 7 புலிகள் வீரமரணம்

மண்டைதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் 7 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

ராஜீவ், இன்பன், ஜொனி. மைந்தன், பானு, சசி, ஜிம்கெலி ஆகியோரே வீரமரணமடைந்ததாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

## தமிழர் கொல்லப்படுவதை உடனடியாக நிறுத்துக!

### அரசிடம் 20 கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஆக. 27

யாழ். குடாநாட்டில் கண்மூடித்தனமான விமானத் தாக்குதலை நடத்தி அப்பாவி மக்களைக் கொல்வதை நிறுத்தும்படி 20 அரசியல் கட்சிகள் கொழும்பில் நேற்று கூட்டாக வேண்டுகோள் விடுத்தன.

இக்கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் கூடி வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் இருபது கட்சிகளும் கூட்டாக வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் இறங்கிய படையினர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஆக,27

முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு வெளியே நான்கு ஹெலிக்கொப்டர்களில் தரையிறக்கப்பட்ட படையினர் விடுதலைப்புலிகளினால்சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று நண்பகல் 11-45 மணியளவில் முகாமுக்குச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் தாக்கு "பவள்" வாகனம் சேதம்

### பத்துப் படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆக, 27

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை 6. 30 மணியளவில் ''பவள்'' கவச வாகனம் சகிதம் வெளியேறிய இராணுவத்தினர் முகாமுக்கு சுமார் ஐநூறு யாருக்கு அப்பால் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் ''பவள்'' கவச வாகனம் முற்றாகச் சேதமுற்றதாகவும்—

அதில் வந்த பத்து இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## கப்பல் மீண்டும் வந்தது; பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 27

பருத்தித்துறைக்கு நேற்றுக் காலை வந்துசேர்ந்த கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதை அடுத்து கடந்த புதன்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்குச்சென்ற கப்பல்இருந்துநேற்று மீண்டும் வந்து சேர்ந்தது.

1, 700 தொன் பொருள்களுடன் வந்த இந்தக் கப்பலில் ஒருபகுதிப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இறக்கப்பட்டது தெரிந்ததே.

இந்தக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்க வசதியாக பருத்தித்துறையில் ஊரடங்கு உத்தரவு நேற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது. பொருள்களை இறக்கி முடிக்கப்படும்வரை ஊரடங்கு பருத்தித்துறைப் பகுதியில் தளர்த்தப்படுமெனத்தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் மூலம் யாழ். மக்களைக் கொல்வதை நிறுத்துக

## 6 எதிர்க்கட்சிகள் கூட்டாக அரசாங்கத்தை வலியுறுத்து

கொழும்பு, ஆக. 27

கண்மூடித்தனமாக விமானத்தாக்குதல்களை நடத்தி யாழ் குடாநாட்டில் உள்ள மக்களைக் கொல்வதை நிறுத்துமாறு ஆறு எதிர்க் கட்சிகள் இலங்கை அரசாங்கத்தைக் கூட்டாகக் கேட்டுள்ளன.

அரசின் நடவடிக்கை நாட்டு மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனிதாபிமானமற்ற செயலாகும் என்றும் இந்த எதிர்க்கட்சிகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் அரசுக்கு சுட்டிக் காட்டி உள்ளன.

தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த யாழ். குடாநாட்டு மக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் அல்லது விடுதலைப்புலிகளை அவர்கள் அழிக்க வேண்டும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அண்மையில் தெரிவித்த கருத்தைத் தாங்கள் எதிர்ப்பதாகவும் அக்கட்சிகள் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

கூட்டறிக்கையில் சுதந்திரக் கட்சி சார்பில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயககா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் உட்பட – தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவலங்கா சமசமாஜக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர். (இ – எ)

## ரூபாவின் மதிப்பு குறையாது

கொழும்பு, ஆக. 26

ரூபாவின் மதிப்பு குறைக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வளைகுடா நெருக்கடியைத் தொடர்ந்து உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ரூபாவின் மதிப்பு குறைக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கொழும்பில் பொருளாதார நிபுணர்கள் அச்சம தெரிவித்தனர்.

நிதி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் ரூபாவின் மதிப்பு எக்காரணம் கொண்டும் குறைக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார். [இ-எ]

## அரைவாசியாக குறைந்தது

கொழும்பு, ஆக. 27

வளைகுடா நெருக்கடி காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல பாஸ்போர்ட் பெறுபவர்களின் எண்ணிக்கை அரைவாசியாக குறைந்துவிட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. [இ-எ]

## இந்தியா தலையிட வேண்டும் என்கிறார் சந்திரகாசன்

சென்னை, ஆக. 27

இலங்கை அரசுப் படைகள் நடத்தும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து அப்பாவித் தமிழரைக் காப்பாற்ற இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும்.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குக்கு அனுப்பிய தந்தியில் ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழக இணைப்பாளர் திரு. எஸ். சி. சந்திரகாசன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால்' முன்னைநாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ராஜிவ் காந்தி ஆகியோருக்கும் இதே போன்ற தந்திகளை திரு. சந்திரகாசன் அனுப்பி வைத்திருக்கிறார்.

வட இலங்கை முழுவதையும் உள்ளடக்கியதாக விமானத் தாக்குதல்களை இலங்கை அரசு முடுக்கி விட்டுள்ளது.

மக்கள் உயிரிழக்கிறார்கள்; அவர்கள் சொல்லொணாத் துன்பமடைந்து வருகின்றார்கள். அவர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்படுகின்றன.

இதனால் தமிழ் நாட்டுக்கு தப்பி வரும் அகதிகள் எண்ணிக்கை பெருகி வருகிறது.

இப்படி அத் தந்திகளில் திரு. சந்திரகாசன் மேலும் கூறியிருக்கிறார். (இ-எ)

## குல்திப் இத்தாலிக்கு

புதுடில்லி. ஆக 27

இந்திய வெளியுறவு அமைச்சில் இலங்கை விவகாரங்களைக் கவனித்து வந்த திரு. குல்திப்சகாதேவ் இத்தாலி நாட்டில் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஒ-எ)

## ஈராக்கிற்கு எச்சரிக்கை

மாஸ்கோ, ஆக. 27

குவைத்தில் இருந்து படைகளை உடனடியாக விலக்கிக் கொள்ளும்படியும் –

தவறினால் ஐ. நா. பாதுகாப்புச் சபைவிதிக்கும் புதிய பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கத் தயாராகும் படியும் ஈராக்கை சோவியத் யூனியன் எச்சரித்துள்ளது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு அனுப்பி வைத்துள்ள தனிப்பட்ட செய்தி ஒன்றில் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-எ)

## அமைதிப்படை குறித்து பிரஸ்தாபம்

சென்னை, ஆக. 27

இலங்கைக்கு இந்திய அமைதிப்படையை அனுப்பவேண்டும் என்று தி. மு. க. கோருமானால், இந்திரா காங்கிரஸ் அதனை ஆதரிக்கும்.

இத்தகவலை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அமைதிப்படை விலக்கப்பட்டதுதான் இலங்கையின் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார். (ஒ-எ)

## வேலை நீக்கம்

சென்னை, ஆக 27

ஒட்டோ சங்கர் உட்பட 5 கைதிகள் மத்திய சிறையில் இருந்து தப்பிய சம்பவம் தொடர்பாக சென்னை மத்திய சிறையின் சுப்பிரின்டனும் [illegible] [எ-இ]


### சின்னஞ்சிறு விளம்பரம்

**அடையாள அட்டை கவறிடுதல்**

உங்கள் அடையாள அட்டைகளுக்கு கவறிட்டுக் கொள்ள (Lamination) கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ]14100]

**மலிவு விற்பனை**

V. K. M. Farm

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12, கனகசபை லேன், (யாழ்/ இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம். [14102]


## -நேசம் மறந்திடுமோ நெஞ்சம்-
## 1ஆம் வருட அஞ்சலி

### திருமதி லூசியா சோமசுந்தரம்
(சின்னமலர்)

மலர்வு: 06 - 12 - 1953 உதிர்வு: 27 - 08 - 1989

ஈரெட்டு வருடங்கள் - இணைபிரியாத் தோழிகளாய்
பாரறியப் பழகியதெல்லாம் - பழங்கதையாய்ப்
போனதுவோ?
சொந்தத்துக்கும் மேலாம் நம் நட்பு -
தொடரட்டும் என்று
பந்தமாய் உன் மகளைத் தந்து பாதியிலே
பிரிந்தாயோ?
மண்ணில் நீ மறைந்தாலும் மலரே - மறந்திடுமோ
உன் நினைவு
விண்ணில் நாம் இணையும் வரை - நிதமும்
உனை நினைந்திடுவேன்!

உனை மறவாத் தோழி
- சரோ -

18, புது வீதி,
சுண்டிக்குளி. (14086)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

திருமதி
### சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை
[சின்னக்கா — இடைக்காடு]

தோற்றம்: 30 - 01 - 1917 சிவகதி: 29 - 07 - 1990

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே!

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை எல்லாம் நல்வழிகாட்டிய தெய்வமே! இன்று உங்களைப் பிரிந்து 31 நாள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே அம்மா! ஈழம் சிக்கித்தவிக்கும் இந்த நேரத்தில், உங்கள் ஆண்பிள்ளைகள் உங்கள் உடம்பைத் தானும் கடைசியில் காணமுடியவில்லையே என்ற கவலை எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தப் போகிறதே அம்மா.

அத்துடன் அம்மாவின் இறுதிக் கிரிகைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஏனைய பல உதவிகள் வழங்கியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு, 28-08-90இல ஆவரங்காலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆவரங்கால். [13920]


## மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட, தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி (Dressed Chicken) மிக மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த அளவிலேயே கையிருப்பு உண்டு.

வாருங்கள்! வாங்குங்கள்!!

392. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[உதயன் பணிமனைக்கு அருகில்]
[C-5178]


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் சற்குணம்
(பட்டயக் கணக்காளர், Zambia)

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாம்பியாவில் கணக்காளராகக் கடமை புரிந்தவருமாகிய சற்குணம் 19-08-1990 அன்று சாம்பியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலம் சென்ற திரு. M. V. இராசரத்தினம் (Railway Guard) திருமதி கண்மணி இராசரத்தினம் அவர்களின் அன்பு மகனும், காலம் சென்ற நா. பொன்னுத்துரை (Surveyor), திருமதி அமிர்தம்மா பொன்னுத்துரை அவர்களின் அன்பு மருமகனும், மாலினியின் அன்புக் கணவனும், உமாராதா அவர்களின் அன்புத் தந்தையும், இராஜகோபாலன் (U. K.) அவர்களின் அன்பு மாமனும், Dr. நற்குணம் (Australia), நிற்குணம் (U. K.) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சாம்பியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அமிர்தம்மா பொன்னுத்துரை

சிவன் வீதி,
உரும்பராய்.
26-08-90 [14101]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் முன்னேறிய பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 27

ஊர்காவற்துறையில் இருந்து அராலிச் சந்தியை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறியபோது பொம்மர் தாக்குதல்களாலும், ஹெலித் தாக்குதல்களாலும் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தாலும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப் பகுதியில் இருந்து சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் வந்தவர்கள் இத் தகவலைத் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் ஊர்காவற்துறை நகரில் இருந்து பண்ணை வீதியால் சரவணைச் சந்திவரை முன்னேறி குடிமக்கள் வாழும் பகுதிகளான சரவணை, மயிலப்புலம், பள்ளம்புலம், சோளாவத்தை ஊடாக நகர்ந்து அராலிச் சந்தியை அடைந்தனர்.

இராணுவம் முன்னேறிய பாதையில் பொம்மர்களும், ஹெலிகளும் தாக்குதல் நடத்தின.

எதிர்பாராதவிதமாக இராணுவத்தினர் குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஊடுருவிய போது பதுங்கு குழிப் பாதுகாப்பு இன்றி இருந்து வந்த பொதுமக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

காயம் அடைந்த பொது மக்களில் சிலர் அராலிக் கடல் மார்க்கமாக இரவு வேளையில் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்திய சாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

மற்றும் சிலர் வேலணை, புங்குடுதீவு வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அராலிச் சந்தியில் நிலை கொண்டிருந்த துருப்புக்கள் அங்கிருந்து அல்லைப்பிட்டியை சென்றடைந்தனர் என்றும் —

அல்லைப்பிட்டியில் தற்காலிக முகாம் அமைக்கப்பட்டு முகாமைச் சுற்றி மின்சார வெளிச்சமும் எரிகிறது என்றும் — அப்பகுதியில் இருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சனிக்கிழமை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் சேதமடைந்துள்ளது.

### சேதம்

புளியங்கூடல் சந்தியில் உள்ள பல கடைகள் பல நோக்கக்கூட்டுறவுச் சங்கம், தபாற்கந்தோர் ஆகியன சேதம் அடைந்துள்ளன.

நாரந்தனைவடக்குதெற்கு, மயிலப்புலம், பள்ளம்புலம் ஆகிய பகுதிகளில் பல வீடுகள் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 20க்கு மேற்பட்ட சடலங்கள் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு மிக மோசமடைந்துள்ளது. [இ-113]

# விதைகள் - நாற்றுக்கள் மறுமலர்ச்சி கழகம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 27

விதைகள், நாற்றுக்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புவோரையும் உள்ளூர் பயிர்ச் செய்கை பற்றிய ஆலோசனைகளைப் பெறவிரும்புவோரையும் மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் வே. அருனோதயம் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் விதைகள், நாற்றுகள் மேலதிகமாக உள்ளவர்களிடமிருந்து மறுமலர்ச் கழகம் இவற்றைச் சேகரித்து வருகிறது.

இப்படியாகச் சேகரிக்கப்படும் விதைகளும், நாற்றுக்களுமே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு வழங்கப்பட உள்ளன. (இ)

# கசிப்பின் 'ஒளி' கண்டு நள்ளிரவில் ஹெலி வேட்டு

திருநெல்வேலி, ஆக. 27

கசிப்பு காய்ச்சியபோது எழுந்த பிரகாசமான வெளிச்சத்தைக் கண்ட ஹெலி அப்பகுதியில் சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கோண்டாவில் பகுதியில் நள்ளிரவு வேளையில் இச் சம்பவம் நடைபெற்றது.

நள்ளிரவு ஹெலியின் மூர்க்கத்தனமான வேட்டுக்களைக் கேட்டு, அப்பகுதி மக்கள் பதறிக்கொண்டு நித்திரையில் இருந்து எழுந்தனர் அப்பகுதி பெரும் அல்லோல கல்லோலப் பட்டது.

கசிப்பு காய்ச்சியவர் விடுதலைப் புலிகளினால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஒ-143

### விண்ணப்பம் அனுப்ப முடியாத நிலை

திருநெல்வேலி, ஆக. 27

வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு பதிவு செய்த மாணவர்களுக்கான முதல் தகுதித் தேர்வுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

தபால் சேவை நடைபெறாததால் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர். வங்கிகள் செயற்படாததால் பரீட்சைக்கட்டணத்தை செலுத்த முடியாத நிலைமையும் இருந்து வருகிறது. (இ-143)

# கிளிநொச்சி ஊழியர்கள் கடமைக்குச் செல்வார்கள்

யாழ்ப்பாணம், ஆக. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைப் பிரிவுகளில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் மீண்டும் இவ்வாரம் கிளிநொச்சிக்குச் செல்வதென கடந்த 20ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உதவி அரச அதிபர்கள், செயலக ஊழியர்கள், கிராம சேவகர்கள், கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் கடமைக்கு சமூகமளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதில் கலந்து கொண்டு பேசிய கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி '' காலத்திற்கேற்ப தம்மை மாற்றி செயற்பட ஊழியர்கள் தயாராக இருக்க வேண்டும் '' என்று கேட்டுக் கொண்டார்.

தற்போதைய ஊரடங்கு நீக்கப்பட்டதும் ஊழியர்கள் கடமைக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [இ-5-69]

### முதலுதவி சிகிச்சை நிலையம்

திருநெல்வேலி, ஆக. 27

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று அப்பகுதி இளைஞர்கள், யுவ [illegible] (இ-143)

# கேரதீவு ஹெலி தாக்குதலில் இறந்தவர்கள் எட்டுப்பேர்

சாவகச்சேரி, ஆக 27

கேரதீவுப் பாலப் பகுதியில் கடந்த புதன்கிழமை ஹெலியில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் எண்மர் மரணம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலில் வந்த செய்திகளில் ஹெலித் தாக்குதலில் பத்துப்பேருக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர் என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இத் தாக்குதல்களில் 8 பேர் மரணம் அடைந்தனர் என்றும் 20 க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவரில் ஒருவர் மட்டுவில் தெற்கைச்சேர்ந்த மணிவண்ணன் (23 வயது)

காயம் அடைந்தவர்களிலும் நால்வர் மட்டுவில், நுணாவில் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் பரந்தனிலிருந்து அரிசி கொண்டு வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. [இ-163 [illegible]

# மானிப்பாயில் எரிப்பதற்கு டயர்கள் பெறுவதில் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஆக. 27

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலைப் பிரிவை அடையாளம் காட்டுவதற்காக எரிக்கப்படும் டயர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைச் சுற்றாடல் பகுதியில் அடையாளமாக 9 இடங்களில் இந்த டயர்கள் கொளுத்தப்பட்டு வருகின்றன.

டயர்களைப் பெறுவது பெரும் கஷ்டமாக இருப்பதால் பழைய டயர் வைத்திருப்பவர்கள் தந்துதவுமாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது. (இ-3-5)

# பொறிவெடிகளை அகற்றும் பணியில் போராளிகள்

கிளிநொச்சி, ஆக. 27

பரந்தனில் இருந்து கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து அவர்கள் தங்கி இருந்த முகாம்களில் பொறி வெடிகளை அகற்றும் பணியில் போராளிகள்ஈடுபட்டுள்ளனர்

முகாம் இருந்த பகுதிக்கு பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

முகாம் அமைத்துள்ள பகுதியில் கடைகள், வீடுகள், அரச அலுவலகங்கள் கொளுத்தப்பட்டிருந்தன.

முகாம் பகுதியில் உள்ள வீடுகளில் பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒரு மாதகாலத்துக்கு முன்னர் கிளிநொச்சி முகாமைக் கைவிட்டு வந்து பரந்தனில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரே கடந்த சனிக்கிழமை வெளியேறி இருந்தனர். பரந்தனில் இருந்து வெளியேறிய இராணுவம் தற்போது ஆனையிறவில் நிலை கொண்டுள்ளது. [இ-76]

# பழையிலிருந்து சாவகச்சேரி வரை தொடர் தாக்குதல்

பச்சிலைப்பள்ளி, ஆக. 27

கடந்த வியாழக்கிழமை காலை முதல் மாலை வரை பழையிலிருந்து சாவகச்சேரி வரை பொம்மர்களும் ஹெலிக்ளும் பல இடங்களில் தாக்குதல்களை நடத்தின. காலையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஹெலியிலிருந்து ஷெல் ஏவப்பட்டதுடன் ஜாம் போத்தல் குண்டுகளும் போடப்பட்டன துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கும் சிறு சேதம் ஏற்பட்டது.

பகல் 12 15 மணிக்கு பளைப்பகுதியை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் றொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதலில் தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன.

பிற்பகல் 4-00 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து பளைக்கு வந்த பயணிகள் வான் மீது மீசாலையில் பொம்மரிலிருந்து றொக்கட் தாக்குதல் நடாத்தப்பட்டது பொம்மர் வட்டமிடுவதைக் கண்ட பயணிகள் அருகில் இருந்து வீடொன்றின் பதுங்கு குழிக்குள் இருந்ததால் உயிர் தப்பினர்.

மாலை 5 30 மணி அளவில் பளை கச்சார் வெளிச் சந்தியில் நின்ற லொறி மீது ஹெலியிலிருந்து பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. லொறிச் சாரதியும் உதவியாளரும் அருகில் இருந்த மதகு ஒன்றின் கீழ் பதுங்கியதால் உயிர் தம்பினார். [இ-117]

# இரு ராணுவ முகாம்களுக்கு மூடு விழா

மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்த இரு இராணுவ முகாம்கள் மூடப்பட்டுவிட்டன.

பளுக்காத்துறை, பொன் பரப்பி ஆகிய இடங்களில்இருந்த முகாம்களே மூடப்பட்டவையாகும்.

அந்த முகாம்களில் இருந்த இராணுவத்தினர் கற்பிட்டி, புத்தளம் ஆகிய இடங்களில் புதிய முகாம்களை அமைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ 5]

# மூன்றாவது டெஸ்டில் இந்தியா முன்னணியில்

லண்டன், ஆக 27

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் கடந்த சனிக்கிழமை மூன்றாம் நாள் ஆட்டம் முடியும் போது 7 விக்கட்டுக்கள் இழப்புக்கு 293 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாட வேண்டியகட்டாய நிலையைத் தவிர்க்க இன்னும் 113 ஓட்டங்களை எடுக்கவேண்டிய இக்கட்டான நிலையில் இந்திய அணி இருக்கிறது.

ஓவலில் நடைபெறும் இந்த இறுதி டெஸ்டில் இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸை 9 விக்கட்டுகள் இழப்புக்கு 606 ஓட்டங்களை எடுத்து முடித்துக் கொண்டது தெரிந்ததே. நேற்று ஆட்டத்தின் ஓய்வு நாளாகும்.

முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதும் -

இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ - எ)

### இலங்கை தூதரைக் காணவில்லை

கொழும்பு, ஆக. 27

குவைத்தில் பணி புரிந்து வந்த இலங்கைத் தூதர் அல் ஹஜ் ஷெரிப்தீனைக் காணவில்லை என்று கொழும்புக்குக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தூதர் ஷெரிப்தீன் எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது. (இ - எ)

# தீவுப்பகுதி மக்கள் பலர் தென்மராட்சி இடம்பெயர்வு

பச்சிலைப்பள்ளி, ஆக.27

ஊர்காவற்றுறை, மண்டைதீவு, காரைநகர் பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பலர் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளுக்கும் வந்துள்ளனர்.

இவர்களை இப் பகுதிகளிலுள்ள முகாம்களில் தங்க வைத்து பராமரிப்பதற்கான ஒழுங்குகளை அகதிகள் நிவாரணக் கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஆஸ்பத்திரி விவகாரம்:

# அமைச்சர் ரஞ்சனுடன் மருத்துவக் குழு பேச்சு

கொழும்பு, ஆக. 27

யாழ்ப்பாணம் கோட்டையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தயார்.

கோட்டையைப் பொறுப்பேற்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தயாரா என்பதற்கு அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறோம்.

— இவ்வாறு பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கூறினார்.

யாழ். போதனா ஆஸ்பத்திரியை மீளத் திறப்பது தொடர்பாக தம்மைச் சந்தித்த யாழ். மருத்துவப் பிரதிநிதிகள் குழுவிடமே அவர் இவ்வாறு தெரிவித்தார் என அறிய வந்தது.

கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

யாழ். மருத்துவ பிரதிநிதிகள் குழுவில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளைத் தலைவர் டாக்டர் சிவகுமாரன், யாழ். போதனா ஆஸ்பத்திரி பணிப்பாளர் செல்வி. புஷ்பம் சண்முகம், யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை, வவுனியா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் மாணிக்கம், டாக்டர் ரவிராஜ் ஆகியோரும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகச் செயலாளரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவுடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், முப்படைத் தளபதிகள் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் சந்திப்பின்போது கலந்துகொண்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியையும் மற்றும் வடக்கில் உள்ள பிராந்திய ஆஸ்பத்திரிகளையும் மீண்டும் இயங்கச் செய்ய எடுக்கப்பட வேண்டிய வழிவகைகள் பற்றி இந்தச் சந்திப்பின்போது பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

"யாழ். கோட்டையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க அரசு தயாராக இருக்கிறது. கோட்டைப்பகுதியை வேறு எவரினதும் கட்டுப்பாட்டின் கீழும் ஒப்படைக்காத விதத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதனைப் பொறுப்பேற்க வேண்டும்.

எமது யோசனை பற்றி அவர்களுக்கு எழுதியுள்ளோம். அவர்களின் பதில் சாதகமாகக் கிடைத்து, கோட்டையை அவர்கள் பொறுப்பேற்றால் யாழ். ஆஸ்பத்திரி சிக்கல் ஏதுமின்றி இயங்கலாம் என்று நம்புகிறேன்" - இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் கூறியதாகவும்-

இந்த யோசனை சந்திப்பில ஏற்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

இந்தச் சந்திப்பில் மேற்படி இணக்கம் காணப்பட்ட பின்னரும், கடந்த புதன்கிழமை முதல் யாழ். கோட்டையில் உள்ள படையினரை மீட்கும் இராணுவ முயற்சியில் அரசுப் படைகள் ஈடுபடத் தொடங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி- வவுனியா, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகளும் இயங்குவதற்கு ஒத்துழைப்புத் தரப்படும் எனவும் அமைச்சர் ரஞ்சன் உறுதியளித்தார். (அ-உ-3)

# வவுனியா ஆஸ்பத்திரியில் ராணுவத்தினருக்குச் சேவை

வவுனியா, ஆக. 27

மூடப்பட்டுள்ள வவுனியா மாவட்ட ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இராணுவத்தினருக்கும் சிகிச்சை அளிக்கும் இராணுவ ஆஸ்பத்திரி செயல்படுகிறது.

அங்கு இராணுவ வைத்திய அதிகாரிகளும், தாதிகளும் கடமை புரிந்து வருகிறார்கள். பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகள் ஏதும் அங்கு நடைபெறுவதில்லை.

## ஹெலித் தாக்கு

இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்திக்கும் சமீபமாக சனிக்கிழமை மாலை இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் 5க்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்தன.


# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு சுந்தரலிங்கம்

நயினாதீவு மார்க்கண்டு, சின்னம்மா தம்பதிகளின் ஏகபுதல்வன் சுந்தரலிங்கம் காலமானார். அன்னார் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட ஆசிரியை பராசக்தியின் அன்புக்கணவரும், செல்விகள் இசா, ஜியா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கனகாம்பிகை சுப்பிரமணியம், திருமதி கைலாசநாதன் இராசலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், எழுதுமட்டுவாள் தாமோதரம்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-8-90 திங்கள் காலை 8-00 மணிக்கு 456, நாவலர்வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. க. நற்குணசிங்கம்

(13922)


# தமிழில் பேசிய சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், ஆக. 27

ஊர்காவற்றுறை பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட சிப்பாய்கள் தமிழில் சரளமாகப் பேசினார்களாம்.

அவர்கள் இரவில் தங்கிய இடங்களில் உள்ள கோழிகளும் 'ருசி' பார்க்கப்பட்டன என்று கூறப்பட்டது. (ஒ-3)

# இளம் பாதிரியாரும் தப்பவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 27

அல்லைப்பிட்டிக்கு வந்த இராணுவத்தினர் இளம் வயதினரை தம்முடன் கூட்டிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டி அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த இளம் பாதிரியார் ஒருவரையும் சிப்பாய்கள் கூட்டிச் சென்றனர். (ஒ-3)

# பெண்களுக்கும் தண்டனை

யாழ்ப்பாணம், ஆக. 27

அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலையில் முகாமிட்ட இராணுவத்தினர் அங்குள்ள பெண்களையும் குழந்தைகளையும் சுற்றிவளைத்து கூட்டிச் சென்று, முகாம் முன்பாக வெய்யிலில் இருத்தி வைத்து பின் விடுதலை செய்தனர்.

சனிக்கிழமை காலை 9மணி முதல் பகல் 2-30 மணிவரை முகாம் முன்பாக அவர்கள் இருத்தி வைக்கப்பட்டனர். (அ-3)

# கடல் பீரங்கிக்கு இருவர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 27

கடலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலால் மண்டைதீவில் இரு பெண்கள் மரணமானார்கள்.

சிவசிவாப்பிள்ளை என்பவரின் மனைவியும் அவரது மாமியாருமே இறந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-ரி-3]

# தீப்பிடித்து குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம், ஆக 27

விளக்கு கொளுத்தியபோது அருகிலிருந்த மண்ணெண்ணைக் 'கான்' தீப்பிடித்து. அது வெடித்துச் சிதறியதால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தையான அ. விவேகானந்தன் (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

பெற்றோல் இருந்த 'கானில்' மண்ணெண்ணை வாங்கியதாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஒ-ரி)

# ஈராக் அமைச்சருக்கு ஐ. நா. அழைப்பு

ஐ. நா. ஆக 27

அவசரப் பேச்சுக்களை நடத்த வருமாறு ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸை ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டீ குயிலர் அழைத்துள்ளார்.

வளைகுடா நெருக்கடிக்குத் தீர்வு காணும் பேச்சுக்களைத் தான் தலையிட்டு நடத்த வேண்டிய தருணம் வந்து விட்டதாக திரு குயிலர் கொலம்பியா தலைநகர் பொகொட்டோவில் செய்தியாளர் மத்தியில் பேசிய போது தெரிவித்தார். (ஒ-எ)

அல்லைப்பிட்டி, நாரந்தனையில்

# காயமடைந்த மக்கள் சிலர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஆக. 27

ஊர்காவற்றுறை, நாரந்தனை, அல்லைப்பிட்டி பகுதிகளில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் காயமடைந்து அவதியுற்ற பலர் பல இன்னல்களுக்கும் மத்தியில் நேற்று மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வேலணை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகள் இயங்காதாலும், தனியார் வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாலும் அங்கு அவசர சிகிச்சை பெற முடியவில்லை என்பதும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த பலர் சிகிச்சை பெறமுடியாத நிலையில் இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## முல்லைத்தீவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சற்று வெளியே-முகாமைச் சூழ சென்றி அமைத்திருக்கும் விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு அப்பால் - இந்தத் துருப்புக்கள் தரையிறக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

தரையிறக்கப்பட்ட படையினர் முகாமுக்கு முன்னேற முயற்சித்ததாகவும் –

அதனைத் தடுத்து, விடுதலைப் புலிகள் அவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி வருவதாகவும் –

தொடர்ந்து சண்டை நடைபெற்றுவருவதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்துதெரியவந்தது. (உ-5

# பெரும் மழையும் கடும் மோதலும்

யாழ்ப்பாணம், ஆக. 27

யாழ் நகரில் நேற்றிரவு 11 மணியளவில் ஆரம்பமான பெரும் மழையுடன், கோட்டைப் பகுதியிலும் கடும் மோதல் தொடங்கியது.

கண்ணைப் பறிக்கும் மின்னல்ஒரு புறமும், ஷெல்களின் பயங்கர முழக்கம் இன்னொரு புறமும் கேட்டபடி இருந்தன.

தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுகளாலும் குண்டுச் சத்தங்களாலும் நகர மக்கள் பதற்றமுற்றனர். (ஒ-5)

## தமிழர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிட்ட அறிக்கையில் மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக பி பி. சி. நேற்றிரவு அறிவித்தது. (ஒ-எ)

# ஊர்காவற்றுறை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த செய்திகள்தெரிவித்தன.

ஆனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகம் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

யாழ்—ஊர்காவற்றுறை பாதையை அண்டிய பிரதேசங்களுடன் போக்குவரத்து தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாலும்—

தகவல் தொடர்புகள் சீரற்று இருப்பதாலும் உயிரிழந்தோர் எண்ணிக்கையை சரிவரக் கணக்கெடுக்க முடியவில்லை.

### சடலங்கள்வீதிகளில் எரிப்பு

சுட்டுக் கொல்லப்பட்ட பலரின் சடலங்கள் வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் போட்டு எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில சடலங்களை படையினரே எரித்துள்ளனர். எஞ்சி கைவிடப்பட்ட நிலையில் கிடந்த சடலங்களைப் பின்னர் பொதுமக்கள் அந்தந்த இடங்களிலேயே போட்டு எரித்தனர்.

### வாகனங்களுடன் வந்தனர்

ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்து அல்லைப்பிட்டி வரை முன்னேறிய படையினர் தங்களுடன் சுமார் ஐம்பது வாகனங்கள் வரை கொண்டு வந்ததாகவும் தப்பி வந்த ஒருவர் சொன்னார்.

தாங்கள் முன்னேறிய பகுதிகளில் இருந்த பொதுமக்களை கோவில், தேவாலயங்கள் மற்றும் பொது இடங்களுக்கு கூட்டிச் சென்ற படையினர் அங்கு வைத்து ஆண்களைத் தனியாகப் பிரித்ததாகவும்-

இவ்வாறு தனியாகப் பிரிக்கப்பட்ட ஆண்கள் முன்னேறும் படையினருடன் பணயக் கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### தளபாடங்களை சுமக்கச் செய்னதர்

படையினர் தமது தளபாடங்கள் மற்றும் பொருள்களை இந்த ஆண்களைக் கொண்டு சுமந்து வரச் செய்ததைத் தாம் கண்டதாக அப்பகுதியிலிருந்து தப்பிவந்த பெண்மணி ஒருவர் கூறினார்.

படையினர் ஊர்காவற்றுறையிலிருந்து முன்னேறி அல்லைப்பிட்டிப் பக்கமாகச் சென்ற பின்னர் இடையில் இருந்த பகுதிகள் மோதல் ஏதுமின்றி அமைதியாகக் காணப்படுவதாகவும் அவா சொன்னார்.

### கடலுக்குள் நடந்து தப்பி வந்தனர்

இராணுவ அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள், இராணுவம் தமது இடத்தை விட்டு அகன்றதும் - இரவோடு இரவாக - படகுகளில் ஏறி அராலித்துறை வழியாக வட்டுக்கோட்டை மற்றும் இடங்களுக்குத் தப்பி வந்து தஞ்சம் புகுந்தனர்.

அராலித்துறைப் பகுதியில் உள்ள கடலில் நீர்மட்டம் குறைவாகஇருந்ததால் இளம் பெண்கள் உட்பட பலர் கடலுக்குள்ளால் நடந்தும்கொட்டைக்காடு அராலித்துறைப் பகுதியை வந்தடைந்தனர்.

பல குடும்பங்களில் ஆண்களைப் படையினர் கைது செய்து கொண்டு சென்றிருப்பதால் அவர்களை விட்டுவிட்டு வர முடியாத நிலையில் அக்குடும்பங்கள் இன்னும் தத்தம் பகுதிகளிலேயே தங்கியிருப்பதாக தெரியவருகிறது.

### வீடுகளில் கொள்ளை

படையினர் முன்னேறிய பகுதிகளில் பல வீடுகள் பொம்மர் மற்றும் ஹெலித் தாக்குதல்களினால் சேதமுற்றிருக்கின்றன.

பல வீடுகள் படையினரால் தீவைத்து எரிககப்பட்டிருக்கின்றன.

பல வீடுகளில் இருந்தஉடைமைகள் நகைகள் மற்றும் ரொக்கப்பணம் ஆகியவை கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன.

பல பெண்களிடமிருந்து நகைகள் அபகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [அ-உ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org